## மறைந்த வாடிக்கையாளின் சொத்துக்களை அவர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர் மற்றும் கேட்போருக்கு விடுவித்தல்

DBOD BC.No.55/09.07.007/2001-02 ஜனவரி 01, 2002

அனைத்து வணிக வங்கிகளுக்கும்
(பிராந்திய கிராம வங்கிகள் நீங்கலாக)

அன்புள்ள ஐயா

### மறைந்த வாடிக்கையாளின் சொத்துக்களை அவர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர் மற்றும் கேட்போருக்கு விடுவித்தல்

மார்ச் 14, 2000ம் ஆண்டில் வெளியான எங்களின் சுற்றறிக்கை DBOD BC.No 148/09.07.007/1999-2000ன் அடிப்படையில், ரூ25,000க்கு மேற்படாத வைப்புத்தொகை வைத்திருந்து இறந்த வைப்புத்தொகைதாரர்களின் சட்டபூர்வ வாரிசுகளுக்கு வாரிசுரிமை சான்றிதழ் வேண்டுமென்று நிர்பந்திக்க கூடாது என்று வங்கிகள் அறிவுறுத்தப்படுகின்றன.

இறந்த வைப்புத்தொகைதாரர்களின் சட்டபூர்வ வாரிசுகளிடமிருந்து, எங்களது சுற்றறிக்கை DBOD BC.No.56/09.07.007/2000-01, டிசம்பர் 6, 2000 தேதியிட்டதில் கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் வங்கிகள் வாரிசுரிமைச் சான்றிதழ் கோரலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

- சச்சரவுகள் இருந்து அனைத்து சட்டபூர்வ வாரிசுதாரர்களும் ஒன்று சேர்ந்து வங்கிக்கு இழப்பெதிர்காப்பு அளிக்காமல் இருப்பது.
- வைப்புத்தொகைதாரரின் சட்டபூர்வ வாரிசு மற்றும் கேட்போரின் நம்பதத்தன்மையில் நியாயமான சந்தேகம் ஏற்படும்போது

2. இறந்த வாடிக்கையாளரின் மற்ற சில சொத்துக்கள் அதாவது வங்கியின் பாதுகாப்பில் உள்ள சில பொருட்கள், பத்திரங்களின் அடிப்படையில் அளிக்கப்பட்ட கடன் போக எஞ்சியுள்ள தொகை ஆகியவற்றிற்கும் மேற்கண்ட கொள்கையின் அடிப்படையிலேயே வகையீடு செய்யப்படவேண்டும் என்று வங்கிகள் எங்களிடம் கோறிக்கை

விடுத்து வருகின்றன.

3. வங்கிகளின் கோரிக்கையை இந்திய வங்கிகள் சங்கத்தோடு சேர்த்து நாங்கள் பரிசீலித்தபோது டிசம்பர் 6, 2000 ஆண்டு சுற்றறிக்கையின்படி உள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்குட்பட்டு, சட்டபூர்வ நடவடிக்கைகளை வலியுறுத்தாமல் இறந்த வாடிக்கையாளரின் மற்ற சொத்துக்களை விடுவித்திடலாம்.

4. தயவு செய்து பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

உங்கள் நம்பிக்கைக்குரிய

சி.கே.என்.ரூபானி
உதவி பொது மேலாளர்